மற்றும் கூனூர் வட்டங்களில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(47) சேலம், ஆத்தூர் வட்டத்தில் பருவமழை தவறியதால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. பழனிமுத்து, '' சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து முழுமையாக விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவர் இருக்கையில் இல்லை.

(பதில் இல்லை.)

(48) கோவை கழிவு நீர்ப்பண்ணைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுவது குறித்து.

திரு. ஆர். செங்காளியப்பன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே. '' கோவை மாநகர் கழிவு நீர்ப்பண்ணை அமைப்பதற்காக வெள்ளனூர், வெள்ளாளப் பாளையம் இடையர் பாளையம், கஞ்சிக் கோணம் பாளையம், கோணவாய்க்கால் பாளையம், போத்தனூர் ஆகிய ஊர்களில் பெருமளவில் நில ஆர்ஜிதம் செய்யும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படுவதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி நானே நேரடியாக அறிவேனென்ற காரணத்தினால், விளக்கத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன். அந்த இடத்தை நானே பார்வையிட்டேன். அந்தக் கழிவுநீர்ப் பண்ணையால் அந்த ஊர்கள்